**செய்தி வெளியீடு எண்: 496** **நாள்: 14.08.2019**

## <u>செய்தி வெளியீடு</u>

### தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 30.06.2019 அன்று முடிவடைந்த காலாண்டின் மொத்த வருமானம் ரூ.960.63 கோடி ஆகும். சென்ற ஆண்டு இதே காலாண்டின் மொத்த வருமானம் ரூ.935.24 கோடி ஆகும். வரிக்கு முந்தைய இலாபம் ரூ.114.28 கோடி இந்நிறுவனம் ஈட்டியுள்ளது. சென்ற ஆண்டு இதே காலாண்டில் வரிக்கு முந்தைய இலாபம் ரூ.38.84 கோடி ஆகும். இது 194 விழுக்காடு அதிகமாகும்.

இந்நிறுவனம் 30.06.2019அன்று முடிவடைந்த காலாண்டில் நிகர இலாபம் ரூ.77.10 கோடி ஈட்டியுள்ளது. இது கடந்த ஆண்டு இதே காலாண்டில் நிகர இலாபம் ரூ.24.69 கோடியாக இருந்தது.

ரூ.57.10 கோடி தேய்மானத்திற்கும் மற்றும் ரூ.54.39 கோடி நிதி செலவினங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் 30.06.2019 அன்று முடிவடைந்த காலாண்டில் 1,09,216 டன் காகிதம் உற்பத்தி செய்துள்ளது. சென்ற ஆண்டு இதே காலாண்டில் காகித உற்பத்தி 1,02,515 டன்னாக இருந்தது. காகித அட்டை 36,502 டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதற்கு இணையான கடந்த ஆண்டு காலாண்டில் 46,247 டன் காகித அட்டை உற்பத்தி செய்திருந்தது.

இந்நிறுவனம் 30.06.2019 அன்று முடிவடைந்த காலாண்டில் 1,02,671 டன் காகிதம் மற்றும் 36,319 டன் காகித அட்டையும் விற்பனை செய்திருக்கிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**